# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு
# 2015

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 6

சுட்டெண்: | | | | | | | |

நேரம்: 150 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. பாரிமகளிரை மூவேந்தரிடமிருந்து காப்பாற்றிய புலவர்

அ) மோசிகீரனார் ஆ) கபிலர்

இ) பரணர் ஈ) பிசிராந்தையார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. குமுகாயம் ________________ வெறுத்து ஒதுக்கும்.

அ) தீயோரை ஆ) நல்லோரை

இ) கற்றோரை ஈ) வீரரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. தேசிகவிநாயகம்பிள்ளைக்குக் கவிமணி என்ற பட்டத்தை வழங்கியவர்

அ) கணபதிப்பிள்ளை ஆ) தாமோதரம்பிள்ளை

இ) உமாமகேசுவரன்பிள்ளை ஈ) வேலுப்பிள்ளை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. எதிர்கால இடைநிலைகள்

அ) கின்று, கிறு ஆ) ப், வ்,

இ) ப், கின்று ஈ) த், ட், ற், இன், ன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. 'விளக்கேந்திய பெருமாட்டி' என்ற சிறப்புப் பெயர் பெற்றவர்

அ) அன்னைபூபதி ஆ) புளோரன்சு நைட்டிங்கேல்

இ) அன்னைதெரேசா ஈ) மேரிகியூரி அம்மையார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. பழமொழி : துணிந்தவனுக்குத் ______________ பஞ்சுமெத்தை.

அ) நாடகமேடை  ஆ) நாட்டியமேடை
இ) தூக்குமேடை  ஈ) இசைமேடை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. பெலிவாவியைக் கட்டிய தமிழ் மன்னன்

அ) குத்திகன்  ஆ) சங்கிலியன்
இ) சேனன்  ஈ) எல்லாளன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. வட்டம் என்பது

அ) பொருட்பெயர்  ஆ) காலப்பெயர்
இ) குணப்பெயர்  ஈ) சினைப்பெயர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. ஒருமை, பன்மை என்பன

அ) பால்  ஆ) இடம்  இ) திணை  ஈ) எண்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. பெருந்தலைச் சாத்தனார் என்ற புலவருக்குத் தன் தலையையே கொடுக்க முன்வந்த மன்னன்

அ) இரும்பொறை  ஆ) குமணன்  இ) அதியமான்  ஈ) பாரி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. கீரிமலையில் அமைந்துள்ள ஈச்சுரம்

அ) கோணேச்சுரம்  ஆ) கேதீச்சுரம்
இ) முன்னீச்சுரம்  ஈ) தம்பலேச்சுரம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. முதலில் இலங்கைக்கு வந்த ஐரோப்பியர்

அ) போர்த்துக்கேயர் ஆ) ஆங்கிலேயர்

இ) ஆரியர் ஈ) ஒல்லாந்தர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. "பூவாதே காய்க்கும் எனத் தொடங்கும்...பாடல் வரி இடம் பெற்ற நூல்

அ) நல்வழி ஆ) மூதுரை இ) நாலடியார் ஈ) திருக்குறள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. **குறள்:-** வானோக்கி வாழு முலகெல்லா ______

கோனோக்கி வாழுங் குடி

அ) தென்னவன் ஆ) மன்னவன்

இ) சின்னவன் ஈ) நல்லவன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. "செங்களம் ஆடிவரும் புகழோடு சிரிக்க மறப்பேனா" எனக் கூறிய கவிஞர்

அ) கனக சுப்புரத்தினம் ஆ) காசிஆனந்தன்

இ) சோமசுந்தரப்புலவர் ஈ) பெருஞ்சித்திரனார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. இலங்கையில் நாகரது ஆட்சி இருந்த இடம்

அ) கொழும்பு ஆ) கல்யாணி இ) நாகதீபம் ஈ) மணிபல்லவம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. கொக்குகள் உதவ நினைத்தது

அ) ஆமைக்கு ஆ) நண்டுக்கு

இ) தவளைக்கு ஈ) மீனுக்கு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. ஆங்கிலேயர் சிங்களவரிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்த ஆண்டு

அ) 1947 ஆ) 1948 இ) 1833 ஈ) 1815

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. சங்கிலியன் சிலை ______________ அமைந்துள்ளது.

அ) யாழ்ப்பாணத்தில் ஆ) மன்னாரில்

இ) திருகோணமலையில் ஈ) மட்டக்களப்பில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. யாழ்ப்பாண அரசுக்கு முன்னர் தமிழரசு நிலவிய இடங்களில் ஒன்று

அ) சிங்கைநகர் ஆ) மட்டக்களப்பு

இ) கொழும்பு ஈ) முல்லைத்தீவு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. உயிர்மெய்யெழுத்துகள்

அ) 247 ஆ) 216 இ) 18 ஈ) 12

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. காகிதஆலை அமைந்துள்ள இடம்

அ) நீர்வேலி ஆ) வாழைச்சேனை

இ) முறுகண்டி ஈ) நல்லூர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. பின்வருவனவற்றுள் படர்க்கை

அ) நான் ஆ) நீ இ) நீங்கள் ஈ) அவன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. தமிழீழப்பகுதியில் போர்த்துக்கேயர் வருகையின்போது இருந்த அரசு

அ) கண்டியரசு ஆ) கோட்டையரசு

இ) யாழ்ப்பாணத்தமிழரசு ஈ) கரையோரச்சிங்களஅரசு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. தமிழேடு என்பதைப் பிரித்து எழுதினால்

அ) தமிழ் + ழேடு
ஆ) தமிழ் + ஏடு
இ) தமிழ் + லேடு
ஈ) தமிழ் + ளேடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. உலகமக்கள் அனைவருக்கும் தாயாக விளங்கியவர்

அ) ஔவையார் ஆ) தெரேசா இ) பூபதி ஈ) நைற்றிங்கேல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. இறந்தகாலத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) பார்த்தான்
ஆ) உண்கிறான்
இ) பறக்கிறது
ஈ) எழுவாள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. மக்களின் புறத்தோற்ற வளர்ச்சி என்பது

அ) பண்பாடு ஆ) உயர்வு இ) ஒழுக்கம் ஈ) நாகரிகம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. "பட்டி பெருகவேணும்........ என்ற பாடல்

அ) தாலாட்டுப்பாடல்
ஆ) ஏர்ப்பாடல்
இ) காதற்பாடல்
ஈ) கடற்றொழிற்பாடல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. யாழ்ப்பாணத் தமிழரசின் கொடி

அ) விற்கொடி
ஆ) நந்திக்கொடி
இ) மீன்கொடி
ஈ) வீணைக்கொடி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.**

முன்னொரு காலத்தில் சென்-சுங் என்றொரு சீன மன்னர் இருந்தார். அவர் கொதிக்க வைத்து ஆறிய நீரையே அருந்தும் பழக்கத்தைக் கொண்டிருந்தார். ஒரு நாள் அரசரின் பணியாட்கள் மரங்கள் அடர்ந்த ஒரு பகுதியில் அரசருக்காகப் பானை ஒன்றினுள் நீரைக் கொதிக்க வைத்தனர். அரசர் அந்நீரைப் பருகினார். அந்நீர் சுவையும் மணமும் கொண்டிருந்தது. அரசர் அந்நீரைக் கவனித்துப் பார்த்தார். அது ஒரு நிறத்தைப் பெற்றிருந்தது. நீரைக் கொதிக்க வைக்கும் போது அருகிலிருந்த செடியிலிருந்து இலைகள் பானையுள் விழுந்தமையே அதற்குக் காரணம் என்று அரசர் அறிந்தார். பின்னாளில் அதுதான் தேயிலை என்று கண்டறியப்பட்டது.

1. கொதிக்க வைத்து ஆறிய நீரை அருந்தும் பழக்கத்தைக் கொண்டிருந்தவர் யார்?

 ____________________

 ____________________

2. அரசருக்காக எதில் நீரைக் கொதிக்க வைத்தனர்?

 ____________________

 ____________________

3. அரசர் பருகிய நீர் எவற்றைக் கொண்டிருந்தது?

 ____________________

 ____________________

4. நீரைக் கொதிக்கவைக்கும் போது எதிலிருந்த இலைகள் பானைக்குள் விழுந்தன?

 ____________________

 ____________________

5. செடியிலிருந்த இலைகள் எது என்று கண்டறியப்பட்டது?

 ____________________

 ____________________

| புள்ளிகள் 10 |
|---|

**3) பாடநூல் வினாக்கள் ஏழில் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. "மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும்" எனப்பாடியவர் யார்?

______________________________

______________________________

2. மன்னார்க் கடலிலில் முத்துக் குளிக்கும் முழு உரிமையையும் பெற்றிருந்த அரசு எது?

______________________________

______________________________

3. பொழுதுபோக்கு நேரங்களிலும் தொழில் செய்யும் போதும் மக்களால் பாடப்படும் பாடல்கள் எவை?

______________________________

______________________________

4. எல்லாளனது ஆட்சியில் நாடு எப்படித் திகழ்ந்தது?

______________________________

______________________________

5. 'ஊக்கமும் உயர்ந்த உள்ளமும்' என்ற பாடலில் யானை புலிக்கு அஞ்சுவதன் கரணியம் யாது எனக் கூறப்படுகிறது?

______________________________

______________________________

6. சிங்கள ஆட்சியாளர்களால் தமிழ் மக்களிடம் இருந்து பறிக்கப்பட்ட உரிமைகள் எவை?

______________________________

______________________________

7. நுண்ணுயிரிகள் வாழும் இடங்கள் எவை?

______________________________

| புள்ளிகள் 10 |
|---|

**4) தரப்பட்டுள்ள சொல்லைப் பொருத்தமாக வைத்துக் கவிதையை ஆக்குவோம்.**

## பறவைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| வண்ணங்களில் | தடைகள் | நாட்டை | வகையாய் | கோலம் |

வண்ண வண்ணப் பறவைகள் - வானில்
வகை________________ ப் பறக்குதே
ஒன்று சேர்ந்து பறக்குதே
ஒரு ________________ போல இருக்குதே
பச்சை மஞ்சள் கறுப்பு என்று
பல ________________ பறக்குதே
எங்கு சென்று வரவும் - அவைக்கு
என்றும் ________________ இல்லையே
எங்கள்________________ ச் சென்று பார்க்க
ஏனோ தடைகள் கூறுங்கள்

புள்ளிகள் 10

**5) இலக்கண, மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. பின்வரும் வினைச்சொற்களின் இடைநிலைகளைத் தருக.

நடப்பான் :- ____________________

பாய்கின்றன :- ____________________

கண்டனர் :- ____________________

2. பாவேந்தர் புரட்சிப் பாடல்களைப் பாடினார்.
இச்சொல்லியத்தில் இடம் பெற்றுள்ள எழுவாய், செயப்படுபொருள், பயனிலை என்பவற்றைத் தருக.

எழுவாய் :- ____________________

செயப்படுபொருள் :- ____________________

பயனிலை :- ____________________

3. 'மடி' என்ற சொல் பெயராகவும் வினையாகவும் அமையுமாறு சொல்லியங்கள் எழுதுக.

பெயர் :- ____________________

வினை :- ____________________

4. பின்வரும் தனிச்சொல்லியங்களைத் தொடர்ச்சொல்லியமாக மாற்றி எழுதுக.

யாழினி பூஞ்சோலையில் மலர்களைக் கொய்தாள்.

யாழினி அழகான மாலை கட்டினாள்.

____________________

____________________

5. பின்வரும் சொற்களின் எதிர்ச்சொற்களைத் தருக.

நட்பு :- ____________________

வெற்றி :- ____________________

தொடக்கம் :- ____________________

புள்ளிகள் 15

## 6) பந்தியைத் தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.

The Sun gives  light to the world. If the sun is not there  it will be dark everywhere. The Sun helps livingthings to live in this world. The sun gives us rain too. So we must praise the sun.

Solen giver lys til Jorden. Hvis Solen ikke er her, vil alt være mørkt. Solen giver ernæring til levende organismer. Solen giver os også regn. Derfor tilbeder vi Solen.

Il sole dà luce al mondo. Se non ci fosse il sole ci sarebbe buio ovunque. Il sole permette a tutti gli esseri viventi di vivere nel mondo. Il sole ci dà anche la pioggia. Quindi lodiamo il sole.

De zon geeft licht aan de wereld. Als de zon er niet is zal het overal donker zijn. De zon helpt de levenden te laten leven in deze wereld. De zon  geeft ons ook regen. Dus moeten we de zon vereren.

Solen ger ljus till världen. Om inte solen finns, kommer vi ha det mörkt. Solen hjälper till organismerna att leva på jorden. Solen ger även oss regn. Därför måste vi prisa solen.

Sola gir lys til verden. Hvis sola ikke var her ville det vært mørkt over alt. Sola hjelper levende vesener til å leve i denne verden. Sola gir oss regn også. Derfor må vi  tilbe sola.

Die Sonne spendet unserer Erde Licht. Wenn es die Sonne nicht gäbr, wäre es auf der Erde überall dunkel. Durch die Hilfe der Sonne können Lebewesen auf dieser Erde leben. Die Sonne gibt uns auch den Regen. Deshalb loben wir die Sonne.

Le soleil éclaire le monde, s'il n'y a pas de soleil alors il fera sombre. Le soleil aide à la survie des espèces vivants et il nous donne la pluie aussi. Pour cela, nous devons remercier le soleil.

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- எல்லாள மாமன்னன்
- மூடஆமை என்ற பாடலைக் கதையாக எழுதுக.
- பனிகாலம்

புள்ளிகள் 20